RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 176 | ஜூலை.1 2025 செவ்வாய்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## கீழடி அறிக்கையை மத்திய அரசு வெளியிடுமா?

### அமைச்சர் தங்கம் தென்னரசு கேள்வி

விருதுநகர்: ஜூலை.1-

இங்கிலாந்து பல்கலைக்கழகம் ஆய்வு முடிவு அறிக்கை வெளியிட்டு விட்டது. இனியாவது மத்திய அரசு கீழடி அகழாய்வு அறிக்கையை வெளியிடுமா என்று அமைச்சர் தங்கம் தென்னரசு கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக தனது எக்ஸ் சமூக வலைதளப் பக்கத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் குறிப்பிட்டிருப்பதாவது: கீழடியில் கிடைத்த மனித மண்டை ஓடுகளை அறிவியல் வழியில் ஆய்வு செய்து, 2,500 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த மனிதனின் முகத்தை வடிவமைத்துள்ளது இங்கிலாந்தின் லிவர்பூல் ஜான் மூர்ஸ் பல்கலைக்கழகம்.

கீழடியில் தமிழ் மக்கள் நாகரிகத்தில் சிறந்தவர்களாக வாழ்ந்தார்கள் என்பதற்கான அறிவியல் சான்றுகள் ஒன்றின் பின்



ஒன்றாக உலக அரங்கில் நிரூபிக்கப்படுவது மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகிறது. இதற்குப் பின்னராவது மத்திய அரசு கீழடி அறிக்கையை வெளியிடுமா? இவ்வாறு தங்கம் தென்னரசு பதிவிட்டுள்ளார்.

## தேசிய ஜனநாயக கூட்டணியில் இன்னும் பல கட்சிகள் இணையும்: மத்திய அமைச்சர் எல்.முருகன் தகவல்

சென்னை: ஜூலை.1-

எங்கள் கூட்டணி யார் தலைமையில் என்பதை பலமுறை பல விளக்கங்களை அமித் ஷா சொல்லிவிட்டார். தேசிய ஜனநாயக கூட்டணியில் இன்னும் பல கட்சிகள் வர இருக்கிறார்கள் என மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் தெரிவித்தார். பிரதமர் மோடியில் 123வது மனதின் குரல் நிகழ்ச்சி நாடு முழுவதும் நேற்று ஒலிபரப்பானது. அதன் ஒருபகுதியாக தி.நகரில் உள்ள தனியார் மண்டபத்தில் பாஜக சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மனதின் குரல் நிகழ்ச்சி ஒலிபரப்பு நிகழ்வில் மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் கலந்து கொண்டார்.

இதையடுத்து, ஆழ்வார்ப்பேட்டையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: விவசாயிகள் பயன்படுத்தும் நிலத்தடி நீருக்கு மத்திய அரசு வரி விதிக்க உள்ளது என்ற தவறான தகவலை வேகமாக பரப்பி வருகிறார்கள். மத்திய அரசு அதற்கான விளக்கத்தை ஏற்கெனவே கொடுத்துள்ளது.

விவசாயிகளுக்கான நிலத்தடி நீரில் எந்த ஒரு கட்டணமும் வசூலிக்கப்படாது என்பதை ஜல்சக்தி துறை அமைச்சகம் தெளிவாக கூறியுள்ளது. திருமாவளவன் முதலில், திமுக தலைமையிலான கூட்டணியா, விசிக தலைமையிலான கூட்டணியா என்றுதான் அவர் கேட்க வேண்டும். அதுவே சரியாக இருக்கும். திமுக கூட்டணி உடையும் நிலையில் இருக்கிறது. பல கட்சிகள் கூட்டணியில் இருந்து வெளியே வர இருக்கிறார்கள்.

அந்த கூட்டணியில் தங்களை தக்க வைத்துக் கொள்ளும் வேலையை மட்டும் திருமாவளவன் செய்ய வேண்டும். எங்கள் கூட்டணி யார் தலைமையில் என்பதை பலமுறை பல விளக்கங்களை அமித் ஷா சொல்லிவிட்டார். தேசிய



ஜனநாயக கூட்டணியில் இன்னும் பல கட்சிகள் வர இருக்கிறார்கள். அவர்களுடன் நாங்கள் பேசிக் கொண்டு இருக்கின்றோம்.

திமுக ஒரு முறை கடவுள் இருக்கிறது என்பார்கள். இன்னொரு முறை கடவுள் இல்லை என்பார்கள். நாம் வேல் எடுத்தால், அவர்களும் வேல் எடுப்பார்கள். முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்று ஜாதகம் பார்த்து பெயர் வைத்து கொள்வார்கள். தேவையென்றால் அவர்கள் கோயிலுக்கு செல்வார்கள். இவையெல்லாம் திமுகவின் இரட்டை நிலைபாட்டைதான் காட்டுகிறது. மத்திய அமைச்சர் அமித் ஷா குறித்து அவதூறாக பேசுவது தமிழனுக்கு, தமிழகத்துக்கும் அழகல்ல.

ஆ.ராசா உடனடியாக பொதுமக்கள் மத்தியில் மன்னிப்பு கேட்க வேண்டும். முதல்வர் ஸ்டாலின் இதில் தலையிட்டு ஆ.ராசா மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். 2026ல் அமைய போவது அதிமுக ஆட்சியா, தேசிய ஜனநாயக கூட்டணியின் ஆட்சியா என்பதற்கான பதிலை பல தலைவர்கள் பல முறை சொல்லிவிட்டார்கள். தேசிய ஜனநாயக கூட்டணி தான் ஆட்சி அமைக்கும். அதிமுக தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணிக்கு தலைமை ஏற்பார்கள். இவ்வாறு அவர் கூறினார்.

## வீரப்பனுக்கு மணிமண்டபம்: அமைச்சரிடம் முத்துலட்சுமி கோரிக்கை

திண்டுக்கல்: ஜூலை.1-

திண்டுக்கல் அருகே சின்னாளபட்டியில் தமிழக வாழ்வுரிமைக் கட்சி நிர்வாகி இல்ல விழாவில் பங்கேற்க அக்கட்சியின் அரசியல் தலைமை குழு உறுப்பினர், சந்தன கடத்தல் வீரப்பன் மனைவி முத்துலட்சுமி வருகை தந்தார். அந்த விழாவில் அமைச்சர் ஐ.பெரியசாமியும் கலந்துகொண்டார். அப்போது அவரிடம் முத்துலட்சுமி, தனது கணவர் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில், தமிழக அரசு மணிமண்டபம் அமைத்துக்கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். இதை முதல்வரிடம் வலியுறுத்துங்கள் என கேட்டுக்கொண்டார். உங்களின் கோரிக்கையை முதல்வர் கவனத்திற்கு கொண்டு செல்கிறேன் என அமைச்சர் தெரிவித்தார்.

தொடர்ந்து விழாவில் பேசிய முத்துலட்சுமி, "இன்று பலர் தமிழ்நாட்டை ஆளப்போகிறோம் என கனவு கண்டு அரசியல் செய்கிறார்கள். நடிகைகளை கட்டிப்பிடித்து ஆடிபணம் சம்பாதித்து விட்டு இன்று நான்தான் தமிழகத்தின் அடுத்த முதல்வர் என மார்தட்டுகிறார்கள்.



அவர்களுக்கு நாம் இடமளிக்க கூடாது. தமிழகத்திற்கு வட மாநிலத்தவர்கள் அதிகம் வந்து தமிழர்களின் வேலை வாய்ப்பை பறித்து வருகிறார்கள்.

இதனால் தமிழர்கள் வேலை வாய்ப்புக்காக பிற மாநிலங்களுக்கு செல்லும் நிலைமை உருவாகிவருகிறது. இதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இலங்கையில் எப்படி தமிழர்களை அழித்து சிங்களர்கள் ஆட்சி செய்கிறார்களோ, அதுபோல மத்தியில் ஆளும் பாஜக அரசு தமிழ்நாட்டில் உள்ள அரசியல் கட்சிகளை அழித்து தமிழ்நாட்டில் ஆட்சி செய்ய நினைக்கிறது" என்றார்.

## சர்வதேச தொழிலாளர் அமைப்பு அறிக்கையின்படி அரசின் நல திட்டங்களால் 95 கோடி பேர் பயன்

### பிரதமர் மோடி பகிர்வு

புதுடெல்லி: ஜூலை.1-

அரசின் நலத் திட்டங்களால் நாடு முழுவதிலும் 95 கோடிக்கும் மேற்பட்டோர் பயன் அடைகின்றனர் என்று பிரதமர் நரேந்திர மோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

மாதத்தின் கடைசி ஞாயிற்றுக் கிழமை 'மனதின் குரல்' (மன் கீ பாத்) வானொலி நிகழ்ச்சி மூலம் நாட்டு மக்களிடம் பிரதமர் மோடி உரையாற்றி வருகிறார். அதன் படி 123வது 'மனதின் குரல்' நிகழ்ச்சி நேற்று ஒலிபரப்பானது. இதில் பிரதமர் மோடி பேசியதாவது: நீண்ட காலத்துக்கு பிறகு, கைலாஷ் மானசரோவர் புனித யாத்திரை மீண்டும் தொடங்கியுள்ளது.

ஜூலை 3ம் தேதி அமர்நாத் புனித யாத்திரை தொடங்க இருக்கிறது, ஒடிசா, குஜராத் உட்பட பல்வேறு மாநிலங்களில் ஜெகந்நாதர் ரத யாத்திரை நடைபெறுகிறது. வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு என்ற பாகுபாடு இன்றி லட்சக்கணக்கான பக்தர்கள் புனித யாத்திரைகளில் பங்கேற்கின்றனர். இதன்மூலம் ஒரே பாரதம் உன்னத பாரதம் என்ற உணர்வு மேலோங்குகிறது.

2 புதிய சாதனைகள்: நமது நாட்டின் 2 புதிய சாதனைகளை உங்களோடு பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். கண்களை பாதிக்கும் ட்ராகோமா நோய் இல்லாத நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது. இது லட்சக்கணக்கான சுகாதார பணியாளர்களின் உழைப்புக்கு கிடைத்த வெற்றி ஆகும். அனைத்து ஊரக பகுதி வீடுகளுக்கும் ஜல் ஜீவன் திட்டத்தின் கீழ் சுத்தமான குடிநீர் வழங்கப்படுகிறது.

இதனால் ட்ராகோமா உட்பட



பாக்டீரியாவால் பரவும் நோய்களின் அபாயம் குறைந்துவருகிறது. இந்தியாவில் நோய்களுக்கான அடிப்படை காரணிகள் கண்டறியப்பட்டு, அந்த நோய்கள் அறவே ஒழிக்கப்பட்டு வருகின்றன என்று உலக சுகாதார அமைப்பே புகழாரம் சூட்டி உள்ளது.

சர்வதேச தொழிலாளர் அமைப்பு சமீபத்தில் ஓர் அறிக்கையை வெளியிட்டது. இதில், இந்தியா முழுவதும் 64 சதவீதத்துக்கும் அதிகமான மக்களுக்கு சமூக பாதுகாப்பு ஆதாயம் கிடைத்து வருவதாக குறிப்பிடப்பட்டு உள்ளது. அதாவது, சுமார் 95 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் அரசு நலத் திட்டங்களால் பயனடைந்து வருகின்றனர். கடந்த 2015ம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 25 கோடிக்கும் குறைவாகவே இருந்தது.

அவசரநிலை ஓர் இருண்ட காலம்: கடந்த 1975ம் ஆண்டில் நாட்டில் அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டது. இந்த அவசர நிலையை அமல் செய்தவர்கள், நமது அரசியலமைப்பு சட்டத்தை படுகொலை செய்தனர். அதோடு நீதிமன்றங்களை தங்களின் அடிமைகளாக மாற்ற முயற்சி செய்தனர். ஜார்ஜ் பெர்னாண்டஸ் உள்ளிட்ட தலைவர்கள் கொடூரமான சித்ரவதைகளுக்கு ஆளாகினர். அவசர நிலை காலத்தில் மிசா சட்டத்தின்படி யாரை வேண்டுமானாலும் கைது செய்ய முடியும் என்ற நிலை இருந்தது. மக்களின் கருத்து சுதந்திரம் பறிக்கப்பட்டது.

அவசர நிலையை எதிர்த்து ஆயிரக்கணக்கான மக்கள் போராடினர். அவர்கள் காட்டுமிராண்டித்தனமாக தாக்கப்பட்டனர். அது ஓர் இருண்ட காலம். ஆனால், அடக்குமுறைக்கு மக்கள் பணியவில்லை. அதை எதிர்த்து போராடி மாபெரும் வெற்றி பெற்றனர். அவசர நிலை திணிக்கப்பட்டு 50 ஆண்டுகள் நிறைவடைந்திருக்கிறது. இதை நினைவு கூரும் வகையில் கடந்த 25ம் தேதி அரசியலமைப்பு படுகொலை தினத்தை கடைபிடித்தோம்.

உடல் உறுதி,ஆரோக்கிய வாழ்வில் நாம் அதிக கவனம் செலுத்த வேண்டும். இதற்கு உடல் பருமனை குறைக்க வேண்டும். அன்றாட உணவில் 10 சதவீதம் வரை எண்ணெய்யை குறைத்தால் உடல் பருமன் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும். ஜூன் 5ம் தேதி உலக சுற்றுச்சூழல் தினத்தை கொண்டாடினோம். இந்தியாவின் சுற்றுச்சூழலை பாதுகாக்க தனிநபர்கள் முதல் பல்வேறு குழுக்கள் அதிதீவிரமாக பணியாற்றி வருகின்றன.

சுற்றுச்சூழலை பாதுகாக்க அம்மாவின் பெயரில் ஒரு மரம் என்ற இயக்கம் நாடு முழுவதும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன்படி, நாடு முழுவதும் கோடிக்கணக்கான மரங்கள் நடப்பட்டுள்ளன. உங்கள் கிராமங்கள், நகரங்களில் அதிக அளவில் மரங்களை நட வேண்டுகிறேன். இதன்மூலம் நமது வருங்கால தலைமுறையினரை பாதுகாக்க முடியும்.

இப்போது அனைவரின் பார்வையும் சர்வதேச விண்வெளி நிலையத்தின் மீது நிலைபெற்றிருக்கிறது. நமது குரூப் கேப்டன் ஷுபன்ஷு சுக்லா, விண்வெளி நிலையத்தில் தங்கியிருக்கிறார். அவரோடு நான் கலந்துரையாடினேன். எங்கள் உரையாடலை நீங்களும் கேட்டிருப்பீர்கள். அடுத்த 'மனதின் குரல்' நிகழ்ச்சியில், ஷுபன்ஷு சுக்லாவின் விண்வெளி பயணம் குறித்து விரிவாக பேசுவேன்.

ஜூலை 1ம் தேதி மருத்துவர்கள், ஆடிட்டர்கள் தினமாக கொண்டாடப்படுகிறது. இரு பிரிவினரும் நமது சமூகத்தின் மிகப்பெரிய தூண்கள். மருத்துவர்கள் நமது உடல் ஆரோக்கியத்தின் பாதுகாவலர்கள். ஆடிட்டர்கள் நமது பொருளாதாரத்தின் வழிகாட்டிகள். அவர்களுக்கு வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு பிரதமர் பேசினார்.

## சென்னையில் மின்சாரப் பேருந்துகள் இயக்கம்: வழித்தடங்கள், சிறப்பு அம்சங்கள் என்னென்ன?

சென்னை: ஜூலை.1-

சென்னையில் சுற்றுச்சூழல் மாசுபாட்டை குறைக்கும் நோக்கில், தமிழ்நாட்டிலேயே முதல் முறையாக மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் முதற்கட்டமாக 207 கோடியே 90 லட்சம் ரூபாய் மதிப்பிலான 120 புதிய தாழ்தள மின்சாரப் பேருந்துகள் இயக்கத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இதுதொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் இன்று (ஜூன் 30) போக்குவரத்துத் துறை சார்பில் சென்னை, வியாசர்பாடியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாட்டிலேயே அரசு போக்குவரத்துக் கழகங்களில் முதல் முறையாக மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் 47.50 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்ட வியாசர்பாடி மின்சாரப் பேருந்து பணிமனையை திறந்து வைத்தார்.

மேலும், சென்னையில் சுற்றுச்சூழல் மாசுபாட்டை குறைக்கும் நோக்கில், தமிழ்நாட்டிலேயே முதல் முறையாக மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் முதற்கட்டமாக 207 கோடியே 90 லட்சம் ரூபாய் மதிப்பிலான 120 புதிய தாழ்தள மின்சாரப் பேருந்துகள் இயக்கத்தை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

மின்சாரப் பேருந்து பணிமனை: சென்னை நகர கூட்டாண்மை திட்டத்தின் கீழ், நிலையான நகர்புற சேவைகள் திட்டத்தின் அடிப்படையில் (CCP-SUSP), உலக வங்கி மற்றும் ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் பங்களிப்புடன், சென்னையில் சுற்றுச்சூழல் மாசுபாட்டை குறைக்கும் நோக்கில், மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில், 625 புதிய தாழ்தள மின்சாரப் பேருந்துகள் இயக்கப்பட உள்ளது.

வியாசர்பாடி, பெரும்பாக்கம்,



பூவிருந்தவல்லி, மத்திய பணிமனை மற்றும் தண்டையார்பேட்டை1 உள்ளிட்ட ஐந்து பணிமனைகள் மூலம் மொத்த விலை ஒப்பந்தத்தின் அடிப்படையில் மின்சாரப் பேருந்துகள் இயக்குவதற்கு, உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மதிப்பீடு 697.00 கோடி ரூபாய் ஆகும்.

இதன் தொடர்ச்சியாக, தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து பணிமனைகளிலும், உரிய கட்டட உட்கட்டமைப்பு, மின்னேற்றம் செய்வதற்குரிய கட்டுமான பணிகள் மற்றும் மின்சாரப் பேருந்துகள் இயக்குவதற்கு தேவையான பராமரிப்பு கூடம், அலுவலக நிர்வாகக் கட்டடம், பணியாளர்கள் ஓய்வறை ஆகியவை புதுப்பிக்கப்பட்டும், புதிய மின்மாற்றிகள் பொருத்துதல் மற்றும் தீயணைக்கும் பாதுகாப்பு உபகரணங்கள் நிறுவுதல் போன்ற அனைத்து பணிகளும் நடைபெற்று வருகிறது.

ஒருமுறை சார்ஜ் செய்தால் குளிர்சாதனமில்லா பேருந்து 200 கி.மீ. இயங்கும். மேற்படி அனைத்துப் பணிகளும் நிறைவுற்று தமிழ்நாட்டிலேயே அரசு போக்குவரத்துக் கழகங்களில் முதல் முறையாக மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் வியாசர்பாடி மின்சாரப் பேருந்து பணிமனை 47.50 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்டு முதல்வரால் இன்றைய தினம் திறந்து வைக்கப்பட்டது.

120 புதிய தாழ்தள மின்சாரப் பேருந்துகள்... தமிழ்நாடு வேகமாக நகரமயமாகி வருவதால் போக்குவரத்தில் பசுமை இல்லா வாயு உமிழ்வு அதிகளவு வெளியேறுகிறது. குறிப்பாக 2005 2019 காலகட்டத்தில் 10 மில்லியன் டன் $CO_2$ லிருந்து 27 மில்லியன் டன் $CO_2$ வரை கார்பன் வெளியேற்றம் மூன்று மடங்காக அதிகரித்துள்ளது.

பொது போக்குவரத்தை மின்மயமாக்குவதன் மூலம் பசுமை இல்லா வாயு உமிழ்வை அதிகரிப்பதை தடுக்கவும், சமன் செய்யவும் முடியும். மேலும், ஒவ்வொரு டீசல் பேருந்தும் ஒரு கிலோ மீட்டருக்கு சுமார் 755 கிராம் கார்பன் டை ஆக்சைடு வெளியிடுகிறது. மின்சாரப் பேருந்துகளை பயன்படுத்துவதன் மூலம் கார்பன் உமிழ்வை குறைத்து, காற்றின் தரத்தை கணிசமாக மேம்படுத்தலாம்.

சென்னையில் சுற்றுச்சூழல் மாசுபாட்டை குறைக்கும் நோக்கில், தமிழ்நாட்டிலேயே முதல் முறையாக மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் முதல் கட்டமாக 207 கோடியே 90 லட்சம் ரூபாய் மதிப்பிலான 120 புதிய தாழ்தள மின்சாரப் பேருந்துகள் இயக்கத்தை பொதுமக்களின் பயன்பாட்டுக்காக தமிழக முதல்வர் கொடியசைத்து தொடங்கி வைத்து, பேருந்தினை பார்வையிட்டார். பின்னர் நடத்துனர் மற்றும் ஓட்டுநர்களிடம் கலந்துரையாடினார்.

புதிய தாழ்தள மின்சார பேருந்துகளில் உள்ள சிறப்பு அம்சங்கள்:

மின்சார பேருந்தின் படிக்கட்டு உயரம் தரையில் இருந்து 400 மில்லி மீட்டராக வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், மின்சாரப் பேருந்துகளில் ரிஸீமீமீறீ வீஸீரீ தொழில் நுட்ப வசதி உள்ளதால், மேலும் 250 மி.மீ. பேருந்தின் தரைத் தளத்தை கீழே இறக்கி மாற்றுத்திறனாளிகள், பெண்கள், குழந்தைகள் மற்றும் முதியோர்கள் பேருந்துகளில் எளிதாக ஏறி, இறங்க வசதி செய்யப்பட்டுள்ளது.

மாற்றுத்திறனாளிகள், பெண்கள், குழந்தைகள் மற்றும் முதியோர்கள் மின்சாரப் பேருந்துகளில் எளிதாக அமரக்கூடிய வகையில் இருக்கைகள் சமதள உயரத்தில் பொருத்தப்பட்டுள்ளது.

இப்பேருந்துகளில் இருக்கைகளின் பக்கவாட்டு இடைவெளி 650 மி.மீ.க்கு பதிலாக 700 மி.மீ. அகலம் உள்ளதால், நின்று செல்லும் பயணிகளுக்கு எளிதாக இருக்கும்.

மின்சாரப் பேருந்துகளில், இரண்டு கேமராக்கள் முன் பகுதியிலும், ஒரு கேமரா பின்புறமும் பொருத்தப்பட்டுள்ளதால் மகளிருக்கு பாதுகாப்பான பயணம் உறுதி செய்யப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர் பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர்.டி.சேகர், ஆர். மூர்த்தி, ஜே.ஜே. எபினேசர், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர், என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



■ செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி 4வது மண்டலம் பெருங்களத்தூர் வடக்கு பகுதி 51வது வட்டத்தில் உள்ள அரசு ஆதிதிராவிடர் நல பள்ளியில் கூடுதல் வகுப்பறைகள் கட்டும் பணியினை தாம்பரம் மாநகர செயலாளர் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா அவர்கள் ஆய்வு மேற்கொண்டார். இந்நிகழ்வில் தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, 4வது மண்டல குழு தலைவரும், பெருங்களத்தூர் வடக்கு பகுதி செயலாளருமான டி.காமராஜ், மாமன்ற உறுப்பினர் பா.லிங்கேஸ்வரி, வட்ட செயலாளர்கள் ஸ்ரீதர் பாபு, இ.கமலக்கண்ணன், பகுதி கழக நிர்வாகிகள் மாவட்ட மாநகர பகுதி அணிகளின் நிர்வாகிகள், வட்ட நிர்வாகிகள் மற்றும் அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் பங்கேற்றனர்.

# காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட திமுக மருத்துவர் அணி சார்பில் நான்காண்டு சாதனை விளக்க மாபெரும் பேரணி






தாம்பரம், ஜூலை.01-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட திமுக மருத்துவர் அணி சார்பாக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாளை முன்னிட்டு தாம்பரத்தில் 1.02 கி.மீ.க்கு, கழக அரசின் நான்காண்டு சாதனை விளக்க மாபெரும் பேரணி நடைபெற்றது. இதில் அமைச்சர் தா.மோ.அன்பரசன் அவர்கள் கொடி அசைத்து துவக்கி வைத்து பின்னர் பேரணியில் கலந்து கொண்டனர்

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட திமுக மருத்துவரணி சார்பாக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாள் விழா முன்னிட்டு திமுக அரசின் நான்காண்டு கால சாதனை விளக்க பேரணி நடைபெற்றது, மாவட்ட மருத்துவர் அணி தலைவர் மருத்துவர் ஆர்.எஸ்.கிருத்திகாதேவி தலைமையில் மாவட்டம் மருத்துவர் அணி அமைப்பாளர் டி. பி.செந்தில்குமார் முன்னிலையில் நடைபெற்ற இந்தப் பேரணியை குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், மாநில மருத்துவர் அணி செயலாளர் மருத்துவர் ந.எழிலன், மாநில மருத்துவரணி தலைவர் கனிமொழி என்.வி.என் .சோமு ஆகியோர் கொடி அசைத்து துவக்கி வைத்து பேரணியில் கலந்து கொண்டனர், இந்த பேரணியானது மேற்கு தாம்பரம் பாபு மகப்பேறு மருத்துவமனை முதல் தாம்பரம் சண்முகா சாலை வரை 1.02 கிலோமீட்டர் தூரம் சென்றது, இந்த பேரணியில் மருத்துவர்கள், செவிலியர்கள், தூய்மை பணியாளர்கள், மாணவர்கள், பொதுமக்கள் என ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர், இறுதியாக அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்பட்டது, மேலும் இந்த பேரணியில் தாம்பரம் மேயர் வசந்தகுமாரி கமலக்கண்ணன், துணை மேயர் கோ.காமராஜ், கழக தீர்மானகுழு செயலாளர் மீ.அ.வைத்தியலிங்கம், மாநில தகவல் தொழில் நுட்ப அணி துணை செயலாளர் அ.தமிழ்மாறன், மாவட்ட துணை அமைப்பாளர் அரவிந்தராஜ் ஆகியோர் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



■ மதுரை மேற்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட துவரிமான் ஊராட்சிக்கு திடக்கழவு மேலாண்மை திட்டத்தின் கீழ் குப்பைகளை ஏற்றி அகற்றும் வாகனத்தை பயன்பாட்டுக்கு மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு.பி மூர்த்தி கொடியசைத்து தொடங்கி வைத்தார்.



■ தூத்துக்குடி மாவட்டத்தில் அரசு தூத்துக்குடி மருத்துவக் கல்லூரியின் 25 வது ஆண்டு தொடக்க விழாவை முன்னிட்டு, மருத்துவக் கல்லூரி வளாகத்தில் அமைக்கப்பட்ட சிறப்பு மருத்துவக் கண்காட்சியினை மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி பி.கீதா ஜீவன் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.இளம்பகவத், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.சிவக்குமார் அவர்கள், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை துணை முதல்வர் மரு.கலைவாணி அவர்கள், உறைவிட மருத்துவ அலுவலர் மரு.சைலஸ் ஜெயமணி அவர்கள், மருத்துவர்கள், பேராசிரியர்கள், மருத்துவக் கல்லூரி மாணவ, மாணவியர்கள் உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்




இராமநாதபுரம், ஜூலை.01-

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்த லைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன் தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பொதுமக்களிடம் பல்வேறு கோரிக்கைகள் குறித்த 443 மனுக்கள் பெற்று மனுதாரரின் முன்னிலையில் மனுக்களை விசாரணை செய்து தொடர்புடைய அலுவலர்களிடம் மனுக்களை வழங்கி உரிய நடவடிக்கையினை விரைந்து மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தர விட்டார்.

இக்கூட்டத்தில் வீட்டுமனைபட்டா, முதியோர் உதவித்தொகை, தனிநபர் வீடு வழங்கும் திட்டம், குடிநீர் இணைப்பு வழங்குதல் உள்ளிட்டவை தொடர்பாக பொதுமக்கள் மனுக்களை அளித்தனர். அதனைத்தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில், ஒவ்வொரு வாரமும் பொதுமக்களிடம் பெறக்கூடிய மனுக்களுக்கு உரிய நடவடிக்கை மேற்கொண்டு ஒரு மாத காலத்திற்குள் மனுதாரர்களுக்கு உரிய தீர்வு வழங்கிட வேண்டும் எனவும், தீர்வு வழங்க முடியாத மனுக்கள் நிலை குறித்து மனுதாரர்களிடம் அலுவலர்கள் எடுத்துரைக்க வேண்டும் எனவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

அதனைத்தொடர்ந்து முதல்வரின் காக்கும் கரங்கள் திட்டத்தின் கீழ் 11 முன்னாள் இராணுவ வீரர்களுக்கு தொழில் முனைவோர் பயிற்சி முடித்ததற்கான சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன் வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர்ஃ நில எடுப்பு திரு.ந.சரவணன் அவர்கள், சமூக பாதுகாப்புத்திட்ட தனித்துணை ஆட்சியர் திருமதி.கிருஷ்ணகுமாரி அவர்கள், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் திருமதி.செல்வி அவர்கள், மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.மணிமாறன் அவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



■ திருப்பூர் மாவட்டம் அனுப்பர்பாளையம் இடையே திரும்பும் 15 வேலம்பாளையம் திருப்பத்தில் சென்று கொண்டு இருந்த ஊனமுற்றோர் 3 சக்கர வாகனத்தில் சென்று கொண்டு இருக்கையில் கவனக்குறைவாக கவனக்குறைவாக ஓட்டி வந்த நான்கு சக்கர வாகனம் மோதியதில ஊனமுற்றோர் மயிரிழையில் உயிர் தப்பினார் விபத்து இதில் ஊனமுற்றவர் உயிர் சேதம் இல்லாமல் தப்பித்தார் அவருடைய மூன்று சக்கர வண்டிகள் அடிபட்டது இதை அவர்களாகவே உணர்ந்து அவருக்கு ஏற்படுத்திய விபத்து உண்டான தொகையை கொடுத்து சரிபடுத்தி விடுகிறேன் என கூறினார் இந்த காவல்துறை அனுப்பர்பாளையத்தை சேர்ந்தது உடனடியாக வந்து தக்க நடவடிக்கை எடுக்குமாறு மாலை தந்தி செய்தியாளர் வீரக்குமார் மற்றும் மக்கள் ஏற்றுக் கொண்டனர்



■ மதுரை மேற்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அச்சம்பத்து கிராமத்தில் மாடக்குளம் கண்மாய்க்கு செல்லும் கால்வாய் கட்டும் பணிகளை மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு.பி மூர்த்தி ஆய்வு செய்து பார்வையிட்டார்.

# கன்னியாகுமரி மாவட்டத்தில் இனிமேல் இணையதளம் மூலமாக மட்டுமே சுகாதார சான்றிதழ்

## மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா தகவல்

கன்னியாகுமரி, ஜூலை.01-

பள்ளிகள், கல்லூரிகள், வணிக வளாகங்கள், திருமண மண்டபங்கள், உணவகம், ஹோட்டல்கள், தொழிற்சாலைகள், சேவை நிறுவனங்கள், என அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் அனைத்திலும் சுகாதாரம் முறையாக பேணப்படுகின்றதா என்று உறுதி செய்து அரசின் சார்பில் பொதுசுகாதாரத்துறையின் மூலம் சுகாதாரச் சான்றிதழ் வழங்கப்பட்டு வருகின்றது. மேலும், பொது மக்களின் ஆரோக்கியத்தை பாதுகாக்கும் வகையில், இந்தச் சான்றிதழ் கட்டாயமாக்கப்படுவதுடன், அதன் புதுப்பிப்பும் காலமுறைப்படி மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும்.

இனி வரும் காலங்களில் கன்னியாகுமரி மாவட்டத்தில் சுகாதாரச் சான்றிதழ் பெற நிறுவனங்கள் தங்களது விண்ணப்பங்களை இணையதளத்தின் மூலமாக மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும். மேலும் சுகாதாரச் சான்றிதழ் பெறுவதற்கான ஆன்லைன் வசதி தமிழ்நாடு அரசின் பொது மைய இணைய சேவை வாயிலாக நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இனி, அனைத்து விண்ணப்பங்களும் <https://www.tnesevai.tn.gov.in/> என்ற அரசு அதிகாரப்பூர்வ இணையதள முகவரி மூலமாக மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும். நேரடியாக (OFFLINE வழியில்) தரப்படும் விண்ணப்பங்கள் ஏற்கப்படாமல் திருப்பி அனுப்பப்படும். சுகாதாரச் சான்றிதழ் பெறுவதற்காக விண்ணப்பிக்கும் போது, தேவையான ஆதார ஆவணங்கள் மற்றும் சுய உறுதிமொழி (Self Declaration) சான்றிதழும் ஆன்லைன் வாயிலாக சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்ட இந்த ஆவணங்களை மதிப்பீடு செய்த பின்னர், தகுதியானவர்களுக்கு சுகாதாரச் சான்றிதழ் இணையதளத்தில் (<https://www.tnesevai.tn.gov.in/>) பதிவேற்றம் செய்யப்படும்.

இதனை விண்ணப்பதாரர்கள் நேரடியாக இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து பயன்படுத்தலாம். சுகாதாரச் சான்றிதழ் பெற்ற நிறுவனங்கள், அந்தச் சான்றிதழின் பிரதியை எடுத்துப் தங்களது நிறுவனங்களில் காட்சிப்படுத்த வேண்டியது கட்டாயம். மேலும், சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து சுகாதார நெறிமுறைகளும் முறையாக பின்பற்றப்பட வேண்டும். இந்த நெறிமுறைகளை மீறுவது ஆய்வின்போது கண்டறியப்பட்டால், சுகாதாரச் சான்றிதழ் ரத்து செய்யப்படும். இனி வரும் காலங்களில் சுகாதாரச் சான்றிதழ்கள் நேரடியாக வழங்கப்படமாட்டாது. மேலும், சான்றிதழுக்கான விண்ணப்பச் செயல்முறையை எளிமைப்படுத்தவும், முழுமையான மற்றும் விரைவான சேவையை உறுதி செய்யவும், இந்த ஆன்லைன் நடைமுறை மிகவும் பயனுள்ளதாக அமையும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா, தெரி வித்துள்ளார்கள்.




# வேலூர் மாவட்ட கம்பன் கழகம் மற்றும் புகழ்ப்பெற்ற, மிகவும் பழமை வாய்ந்த ஊரிசு கல்லூரி தமிழ்த் துறை இணைந்து கவியரசர் கண்ணதாசன் விழா

வேலூர், ஜூலை.01-

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, அண்ணா சாலை, புகழ்ப்பெற்ற, மிகவும் பழமை வாய்ந்த ஊரிசு கல்லூரியில், வேலூர் மாவட்ட கம்பன் கழகம் மற்றும் ஊரிசு கல்லூரி தமிழ்த் துறை இணைந்து கவியரசர் கண்ணதாசன் விழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் ஊரிஸ் கல்லூரி முதல்வர் ஜெ.ஆணி கமலா பிரான்சிஸ் முன்னிலை வகித்தனர். சிறப்பு அழைப்பாளர்களாக விஜடி பல்கலைக்கழக வேந்தர் விஸ்வநாதன் கலந்து கொண்டு தலைமையுரையாற்றினார். விஜடி துணை தலைவர் செல்வம் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இதனைத் தொடர்ந்து வழக்கறிஞர் தா.ராமலிங்கம் எழிலுரை, கவியருவி அப்துல் காதர் சிறப்புரையாற்றினர்.

கவிஞர் கண்ணதாசனின் பாடல் உலகில் உள்ள அனைவரின் உள்ளத்தை வென்று சாகாவரம் பெற்றவராய் மக்களின் மனதில் அவர் வாழ்கிறார் இன்றுள்ள இளம் தலைமுறையினர் மாணவ மாணவிகள்அவரின் பாடல் வரிகளை கேளுங்கள் என இவ்வாறு அறிவுறுத்தினர்.




■ தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் தமிழ்நாடு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறைபின்கீழ் செயல்பட்டு வரும் நகர் ஊரமைப்பு இயக்ககம் சார்பில் தூத்துக்குடி கூட்டு உள்ளூர் திட்டக் குழுமம் பகுதிகளுக்கான வரைவு முழுமைத் திட்டம் குறித்து பொதுமக்கள் தங்களது கருத்துக்களை தெரிவிக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ள அறிவிப்பு பலகையினை தமிழ்நாடு கூட்டு உள்ளூர் திட்டக்குழுமத் தலைவர் / மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.இளம்பகவத் இ.ஆ.ப. அவர்கள் வெளியிட்டார்கள். இந்நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ஆ.இரவிச்சந்திரன் அவர்கள், சமூக பாதுகாப்புத்திட்ட தனித் துணை ஆட்சியர் திரு.ஹபிபூர் ரஹ்மான் அவர்கள், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திருமதி சாந்தி அவர்கள், உதவி இயக்குநர் (நகர் ஊரமைப்பு)செல்வி சி.அனுஜா அவர்கள், வரைவாளர் திரு.ஜெயபால் அவர்கள் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.



■ விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ராஜேந்திரன் பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார்



# கல்லலில் தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்டச் செயற்குழு கூட்டம்

கல்லல், ஜூலை.01-

சிவகங்கை மாவட்டம் கல்லலில் தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்டச் செயற்குழு கூட்டம் முருகப்பா மேல் நிலைப்பள்ளி கூட்டரங்கில் நடைபெற்றது. மாவட்டத் துணைத் தலைவர் அரிமா சையது தலைமை வகித்தார். மாவட்ட கௌரவத் தலைவர் சாஸ்தா சுந்தரம் மாவட்ட துணை தலைவர் பாலசுப் பிரமணியன் முன்னிலை வகித்தனர். தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்டச் செயலாளர் ஆரோக் கியசாமி வரவேற்புரை யாற்றினார். மாவட்ட துணைச் செயலாளர் ராசுவின் அறிவியல் பாடலுடன் கூட்டம் தொடங்கியது. பள்ளியின் உதவி தலைமை ஆசிரியர் மோகன் ராவ் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார். குழந்தைகள் அறிவியல் மாநாட்டு சிவகங்கை மாவட்ட ஒருங்கிணைப்பாளராக முனைவர் இளையராஜா தேர்ந்தெடுக்கப்பட்டார்.



பள்ளிக்கல்வி துறையுடன் இணைந்து மூன்று ஆண்டுகளாக பணிபுரிந்த வானவில் மன்ற கருத்தாளர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டு மீண்டும் வருகின்ற கல்வியாண்டில் பணிபுரிவதற்கான ஒப்புதல் வழங்கப்பட்டது. அனைத்து ஒன்றியங்களிலும் உறுப்பினர் சேர்க்கையை அதிகரிக்க கேட்டுக் கொள்ளப்பட்டது. அமைப்புசார் பயிற்சியை கல்லலில் நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது. 12 ஒன்றியங்களிலும் மூட நம்பிக்கைகளை ஒழிக்கும் கலைப் பயணத்திற்கான நிர்வாகிகள் தேர்ந்தெடுக் கப்பட்டனர். சமம் மாநிலப் பயிற்சி பெற்ற சித்ரா மாவட்ட சமம் உபக்குழு அமைப்பு பயிற்சி குறித்து பேசினார். சிவகங்கை கிளைத் தலைவர் மணவாளன் கல்லல் செயற்குழு உறுப்பினர் விநாயக மூர்த்தி வாழ்த்துரை வழங்கினர். மாவட்டப் பொருளாளர் பிரபு நன்றி கூறினார். பல்வேறு ஒன்றி யங்களிலுள்ள கிளை நிர்வாகிகளும் வானவில் மன்ற கருத்தாளர்களும் துளிர் இல்லப் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.



# தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர் தலைமையில் நடைபெற்றது

தென்காசி, ஜூலை.01-

தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஏ.கே.கமல்கிஷோர், தலைமையில் நடை பெற்றது. இக்கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

மாற்றுத்திறனாளிகள் நலத்துறையில் உதவி உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் 10 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.8500/ வீதம் மொத்தம் ரூ.85,000/ மதிப்பிலான செயற்கைக் கால்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

மேலும், இக்கூட்டத்தில் இலவச வீட்டுமனை பட்டா, முதியோர் உதவித்தொகை, அடிப்படை வசதிகள் ஏற்படுத்தி தரக்கோருதல், பட்டா மாறுதல், மாற்றுத் திறனாளிகள் உதவித்தொகை மற்றும் இதர மனுக்கள் என மொத்தம் 589 மனுக்கள் பெறப்பட்டது. பெறப்பட்ட மனுக்கள் தகுதி வாய்ந்த மனுக்களாக உள்ளதா என்பதை விசாரணை செய்து விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு மனுதாரர்களுக்கு உரிய பதில் அளிக்குமாறு சம்பந்தப்பட்ட அனைத்து துறை அலுவலர்களுக்கும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சீ.ஜெயச்சந்திரன், ஊரகவளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.மைக்கேல் அந்தோணி பெர்னாண்டோ, மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு.ஜெயப்பிரகாஷ், துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத்திட்டம்) திரு.நம்பிராயர் மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி தலைமையில் நடைபெற்றது

சேலம், ஜூலை.01-

சேலம் மாவட்ட ஆட்சியரகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, தலைமையில் நடை பெற்றது. பின்னர், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்களுக்கு உடனுக்குடன் தீர்வு காணவும், அடிப்படைத் தேவைகளுக்கு முக்கியத்துவம் அளித்திடவும், பெண்களின் முன்னேற்றத்திற்குத் தேவையான நடவடிக்கைகள் உள்ளிட்ட பணிகளில் அரசு அலுவலர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டுமெனவும், குறிப்பாக பொதுமக்கள் ஒருமுறை வழங்கிய மனுக்கள் மீண்டும் வராத வகையில் மனுவின் மீது உரிய தீர்வு வழங்கப்படுவதை அலுவலர்கள் உறுதி செய்திட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.



அதனடிப்படையில், இன்றைய தினம் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து முதியோர் உதவித் தொகை, இலவச வீட்டுமனைப்பட்டா, பட்டா மாறுதல், சாதிச் சான்று, வேலை வாய்ப்பு, வங்கிக்கடன்கள், கல்வி உதவித்தொகை, திருமண நிதியுதவி, மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித்தொகை, உதவி உபகரணங்கள், குடிநீர் வசதி, சாலை வசதி உட்பட அடிப்படை வசதிகள் மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி 534 மனுக்கள் வரப்பெற்றன.

மேலும், மாற்றுத் திறனாளிகள் எவ்வித சிரமமும் இன்றி மனுக்களை வழங்கும் வகையில் மாவட்ட ஆட்சியரகத்தின் தரைத் தளத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கென நடத்தப்பட்டு வரும் குறைதீர் முகாமில் வீட்டுமனைப் பட்டா, உதவி உபகரணங்கள், பராமரிப்பு உதவித் தொகை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் குறித்து அளிக்கப்பட்ட 18 மனுக்களைப் பெற்று, உரிய நடவடிக்கை மேற்கொள்ள தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.இரா.பிருந்தாதேவி, தெரிவித்தார்.

இன்றைய தினம் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் தாட்கோ துறையின் மூலம் 3 தூய்மைப்பணியாளர்களின் குழந்தைகளுக்கு கல்லூரி பயிலுவதற்கான கல்வி உதவித்தொகைக்கான ஆணைகளையும், 2 தூய்மை பணியாளர்களின் குடும்பத்திற்கு இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கிற்கு நிவாரணமாக தலா ரூ.25,000 மதிப்பிலான காசோலையினையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இரா.ரவிக்குமார், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) திருமதி ச.ஜானகி, மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் திரு.கணேஷ், பழங்குடியினர் நல அலுவலர் திருமதி சுகந்தி பரிமளம், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு. இரா. மகிழ்நன், மாவட்ட மேலாளர் (தாட்கோ) திரு.சக்தி வேல் உள்ளிட்ட அரசுத்துறை முதன்மை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி அறிவுரையின்படி, மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில்,

## மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ்.செல்வசுரபி பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கை மனுக்களை பெற்று, கோரிக்கைகள் குறித்து கேட்டறிந்தார்

சிவகங்கை, ஜூலை.01-

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி அறிவுரையின்படி, மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ். செல்வசுரபி பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கை மனுக்களை பெற்று கோரிக்கைகள் குறித்து கேட்டறிந்தார்.

மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், இலவச வீட்டுமனைப் பட்டா, சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் உதவித் தொகை, மாவட்ட ஊனமுற்றோர் மற்றும் மறுவாழ்வுத்துறை உதவித்தொகை மற்றும் மாற்றுத்திறனாளிகளு க்கான உபகரணங்கள், புதிய மின்னணு குடும்ப அட்டை போன்ற பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, பொதுமக்களி டமிருந்து 377 மனுக்கள் பெறப்பட்டது. அம்மனு க்களில் தகுதியுடைய மனுக்கள் மீது தனி கவனம் செலுத்தி, விரைந்து நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ்.செல்வசுரபி அவர்கள் அறிவுறுத்தினார்.

மேலும், மாற்றுத் திறனாளிகள் நலத்து றையின் சார்பில் பல்வேறு வகையான உதவி உபகரணங்களை மாற்றுத்திறனாளிகளுக்கு மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ்.செல்வசுரபி அவர்கள் வழங்கினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலம்) செல்வி கீர்த்தனா மணி அவர்கள் உட்பட அரசின் பல்வேறு துறைகளைச் சார்ந்த முதன்மை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



# மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்: மாவட்ட ஆட்சித்தலைவர் மு.அருணா தலைமையில் நடைபெற்றது

புதுக்கோட்டை, ஜூலை.01-

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட ஆட்சித்தலைவர் மு.அருணா, தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது;

பொதுமக்களின் குறைகளை மனுக்களாக பெற்று தீர்வு காணும் வகையில், வாரந்தோறும் திங்கட்கிழமைகளில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்று வருகிறது. அதனடிப்படையில் இன்றையதினம் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், முதியோர் உதவித்தொகை, வேலைவாய்ப்பு, கல்வி உதவித்தொகை, பட்டாமாறுதல்; போன்ற பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 620 மனுக்களை பொதுமக்கள் அளித்தனர். இம்மனுக்களின் மீது விசாரணை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அரசு அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும், கூட்டுறவுத் துறையின் சார்பில், நடைபெற்று முடிந்த 10 மற்றும் 12ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில், தமிழ் பாடப் பிரிவில் அதிக மதிப்பெண் பெற்ற 113 மாணாக்கர்களுக்கு, கலைஞர் நூற்றாண்டு தமிழ் ஊக்குவிப்பு நிதிக்கான பரிசுத் தொகைகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. மேலும், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில், பாலன் நகர் பகுதி ஐஐ திட்டப் பகுதியில், 4 பயனாளிகளுக்கு தலா ரூ.9.21 லட்சம் வீதம் ரூ.36.84 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளுக்கான ஒதுக்கீடு ஆணைகள் வழங்கப்பட்டது எனவும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வுகளில், மாவட்ட வருவாய் அலுவலர் அ.கோ.ராஜராஜன் , தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) திருமதி.அ.ஷோபா, கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் திருமதி.ம.தீபாசங்கரி, முதன்மை கல்வி அலுவலர் திரு.கூ.சண்முகம், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு.உலகநாதன், உதவி இயக்குநர் (தமிழ் வளர்ச்சி) ச.சீதா லெட்சுமி, உதவிப் பொறியாளர் எஸ்.பிரியங்கா மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

# ஈரோட்டில் உள்ள கொடிவேரி அணைக்கு ஒரு மாதத்தில் 3 லட்சம் சுற்றுலா பயணிகள் வருகை

கோபி, ஜூலை.01-

கோபி அருகே உள்ள கொடிவேரி அணைக்கு கடந்த ஒரு மாதத்தில் 3 லட்சம் சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளனர். ஈரோடு மாவட்டம், கோபி அருகே உள்ள கொடிவேரி அணையானது ஈரோடு மாவட்டத்தில் உள்ள முக்கிய சுற்றுலாத்தலமாக உள்ளது. பவானி ஆற்றின் குறுக்கே சுமார் 700 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட இந்த அணையில் சுமார் 15 அடி உயரத்தில் இருந்து அருவிபோல் தண்ணீர் கொட்டுவதாலும், பெண்கள், குழந்தைகள் பாதுகாப்பாக குளிக்க முடியும் என்பதாலும் ஒவ்வொரு விடுமுறை மற்றும் பண்டிகை நாட்களில் ஆயிரக்கணக்கான



சுற்றுலா பயணிகள் இங்கு வருவது வழக்கம். அவர்கள் அருவிபோல் விழும் தண்ணீரில் குளித்தும், அணையின் கீழ் பகுதியில் கடற்கரை போன்ற மணற்பரப்பில் அமர்ந்து சுவையான மீன் மற்றும் உணவு வகைகளை சாப்பிட்டும், அணையின் மேல் பகுதியில் உள்ள சிறுவர் பூங்காவில் பெண்களும், குழந்தைகளும் விளையாடியும் விடுமுறையை உற்சாகமாக களித்தும் செல்வார்கள். ஒரு நபருக்கு 5 ரூபாய் மட்டுமே கட்டணம் வசூலிக்கப் படுவதாலும், மிகக்குறைந்த செலவில் விடுமுறையை கழிக்க முடியும் என்பதாலும் கோடை விடுமுறை நாட்களில் நாள்தோறும் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சுற்றுலா பயணிகள் வந்தனர். ஏப்ரல், மே மாதத்தில் மட்டும் சுமார் 3 லட்சம் பேர் கொடிவேரி அணைக்கு வந்தனர். இந்நிலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை விடுமுறை தினம் என்பதால் கொடிவேரி அணைக்கு ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் வந்தனர். அவர்கள் அணையில் குளித்தும், பூங்காவில் விளையாடியும் உற்சாகமாக விடுமுறையை களித்தனர்.



# நெல்லையப்பர் கோயில் தேரோட்டத்தை ஒட்டி ஜூலை 8ம் தேதி உள்ளூர் விடுமுறை அறிவிப்பு

நெல்லை, ஜூலை.01-

நெல்லையப்பர் கோயில் தேரோட்டத்தை ஒட்டி ஜூலை 8ம் தேதி பள்ளி, கல்லூரிகள், அனைத்து மாநில அரசு அலுவலகங்கள், நிறுவனங்களுக்கும் உள்ளூர் விடுமுறை அறிவித்துள்ளது. உள்ளூர் விடுமுறையை ஈடு செய்யும் வகையில் ஜூலை 19ம் தேதி வேலை நாளாக மாவட்ட நிர்வாகம் அறிவித்துள்ளது.


# பத்திரம் காணவில்லை

கடந்த 30/05/2025 அன்று எனக்கு சொந்தமான கிரைய பத்திரம் ஆவண எண் 1372/1993 சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் சார் பதிவாளர் அலுவலகத்தின் அருகில் காளையார்கோவில் மறவமங்களம் ரோட்டில் உள்ள ஜெராக்ஸ் கடையில் நகல் எடுத்து கொண்டு வீடு திரும்பிய போது அசல் பத்திரம் தவறி விட்டது. யாரேனும் கிடைக்கப்பெற்றால் கீழ்காணும் முகவரியிலோ அல்லது அருகில் உள்ள காவல் நிலையத்தில் தெரியப்படுத்தவும் .

இப்படிக்கு

**காதர் முஹைதீன்**

த/பெ அப்துல்லா,
க/எண். 904 வ.உ.சி.தெரு, காளையார்கோவில்
சிவகங்கை 630551
செல்: 9047929414
இணையதள புகார் எண்: CA25332921

# தேனி மாவட்டம்: கலைக்குழு நடத்துவதற்கு தேவையான உபகரணங்கள் பெற்ற திருநங்கைகள் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்தனர்





மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளிய அடித்தட்டு மக்களின் வாழ்வில் முன்னேற்றம் காணும் வகையில் எண்ணிலடங்கா திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள்.

திருநங்கையர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை தீர்க்கவும், திருநங்கையர்களும் கௌரவமான தொழில் செய்வதன் மூலம் தங்கள் வாழ்வாதாரத்தை ஈட்ட முடியும் என்பதை கருத்தில் கொண்டு, இந்தியாவிலேயே முதல் மாநிலமாக தமிழ்நாட்டில் முன்னாள் முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்களால் திருநங்கையர் நலவாரியம் 15.04.2008 அன்று உருவாக்கப்பட்டது.

இந்நலவாரியம் மூலம் திருநங்கைகள் பொருளாதார ரீதியாக மேம்பட, அடையாள அட்டை, குடும்ப அட்டை, வீட்டுமனை பட்டா, குடியிருப்பு வீடுகள், இலவச தையல் இயந்திரம், உயர்கல்வி பயில உதவித்தொகை, சுய உதவி குழுக்கள், சாதாரண கட்டண நகரப் பேருந்துகளில் கட்டணமில்லா பயண வசதி, இலவச திறன் பயிற்சி, வருமானத்தை ஈட்டும் தொழில் செய்திட ரூ.50,000/ வரை மானியம் போன்ற பல்வேறு சேவைகள் வழங்கப்படுகின்றன.

திருநங்கைகள் தங்களது சுயவிவரங்களை பதிவு செய்யவும், அரசின் நலத்திட்ட உதவிகளைப் பெறவும் திருநங்கைகள் என்னும் கைப்பேசி செயலி உருவாக்கப்பட்டுள்ளது.

தங்களுடைய தனித்திறமையால் முன்னேறியவர்கள் மற்றும் திருநங்கையர் நலனுக்காக சிறப்பாக பணியாற்றிய திருநங்கையர்களை ஊக்குவிக்கும் விதமாக ஒவ்வொரு ஆண்டும் திருநங்கையர் தினமான ஏப்ரல் 15 அன்று மாநில அளவிலான திருநங்கையருக்கான சிறப்புவிருது 2020 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், 40 வயதிற்கு மேற்பட்ட ஆதரவற்ற ஏழ்மை நிலையிலுள்ள திருநங்கைகளுக்கு மாதந்தோறும் வழங்கப்பட்டு வந்த ஓய்வூதியத்தினை ரூ.1,000/ யிலிருந்து ரூ.1,500/ ஆக உயர்த்தி வழங்க உத்திரவிட்டார்.

மேலும், திருநங்கைகளும் மற்றவர்களைப் போன்றே சமமாக உயர்கல்வி கற்பதற்கான வாய்ப்புகளை உறுதி செய்யும் விதமாக 20242025 ஆம் நிதியாண்டு முதல் உயர்கல்வி பயில விரும்பும் திருநங்கைகளுக்கான கல்விக்கட்டணம், விடுதிக்கட்டணம் உட்பட அனைத்துச் செலவினங்களையும் வாரியத்தின் மூலம் வழங்கிட உத்தரவிட்டார்.



தேனி மாவட்டத்தில், 138 திருநங்கைகளுக்கு அடையாள அட்டையும், 113 திருநங்கைகளுக்கு குடும்ப அட்டையும் (Smart Card), 64 திருநங்கைகளுக்கு மருத்துவ காப்பீட்டு அட்டையும் வழங்கப்பட்டுள்ளது. மேலும், 40 வயதிற்கு மேற்பட்ட 25 திருநங்கைகளுக்கு மாதாந்திர ஒய்வூதியமாக (ரூ.1500/ ) வழங்கப்பட்டுவருகிறது. சுய தொழில் தொடங்க 3 திருநங்கைகளுக்கு தலா ரூ.50,000/ வீதம் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

திருநங்கையர்களின் கோரிக்கைகளை நிவர்த்தி செய்யும்பொருட்டு, கடந்த ஜீலை2023 ஆம் மாதம் முதல் மாதந்தோறும் திருநங்கைகளுக்கான குறைதீர்க்கும் முகாம் நடத்தப்பட்டு கோரிக்கைகள் நிவர்த்தி செய்யப்பட்டு வருகிறது.

ஒருங்கிணைந்த சேவை மையத்தில் (OSC) பாதுகாவலர் (Security Guard) பதவிக்கு திருநங்கை இன்பஸ்ரீ என்பவருக்கு தொகுப்பூதிய அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டுள்ளார். சென்னையை சேர்ந்த திருநங்கை நிவேதா என்பவருக்கு தேனி மாவட்டம் வீரபாண்டி கால்நடை மருத்துவ கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் கல்லூரில் BVSc & AH உயர்கல்வி பயில்வதற்கான கல்விக் கட்டணம் மற்றும் விடுதிக் கட்டணம் உள்ளிட்ட அனைத்து கல்விச் செலவினங்களும்தமிழ்நாடு திருநங்கைகள் நல வாரியத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திருங்கையர்களின் கோரிக்கையினை ஏற்று, ஆண்டிபட்டி பகுதியை சேர்ந்த "தாய் காவியா" கலைக்குழுவினருக்கு கலை நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு ரூ.1,24,000/ மதிப்பிலான பறை, சலங்கை, பேஸ் டிரம் மற்றும் கரகத்திற்கு தேவையான பித்தளை செம்பு, டோப்பு கிளி ஆகிய உபகரணங்கள் மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் அவர்களால் 16.06.2025 அன்று வழங்கப்பட்டது.

இதுகுறித்து தாய்காவியா கலைகுழுவினை சேர்ந்த திருநங்கைகள் தெரிவித்ததாவது,

நாங்கள் 20 வருடங்களுக்கு மேலாக தாய்காவியா கலைக்குழுவினை நடத்தி வருகின்றோம். எங்களுக்கு சொந்தமாக இசைக்கருவிகள் மற்றும் நடனக்கருவிகள் இல்லாததால் நிகழ்ச்சிகளுக்கு செல்லும்போது வாடகைக்கு எடுத்து சென்று பயன்படுத்துவோம். இதனால் எங்களுக்கு கிடைக்கும் வருமானத்தில் பாதி தொகை உபகரண வாடகைக்கு செலுத்தி விடுவோம்.

இந்நிலையில் எங்கள் கலைக்குழுவிற்கு தேவையான உபகரணங்களை வழங்க கோரி மனு அளித்திருந்தோம்.



கடந்த 16.06.2025 அன்று மாண்புமிகு தமிழ்நாடு துணை முதல்வர் அவர்கள் தேனி மாவட்டத்திற்கு வருகை தந்தபோது, எங்கள் கலைக்குழுவிற்கு ரூ.1,24,000/ மதிப்பிலான இசை மற்றும் நடனக்கருவிகளை வழங்கினார்கள்.

இதன் மூலம் உபகரணங்களுக்கான வாடகை செலவு குறைந்து, எங்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்திக்கொள்ள முடியும்.

எங்கள் தொழில் மேம்படுவதற்காக, எங்கள் கலைக்குழுவிற்கு தேவையான உபகரணங்களை வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் மற்றும் துணை முதலமைச்சர் அவர்களுக்கும் எங்கள் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம் என தாய்காவியா திருநங்கைகள் குழுவினர் தெரிவித்தனர்.

**வெளியீடு :**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தேனி.**




## தேசிய அளவிலான வில்வித்தை போட்டியில் மானாமதுரை மாணவர்கள் சாதனை

நாமக்கல், ஜூலை.01-

நாமக்கல்லில் ஆர்.ஜி.பி.ஜ சார்பாக தனியார் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற தேசிய அளவிலான வில்வித்தை போட்டி நடைபெற்றது.

இதில் சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சார்பாக பயிற்சியாளர் கலைவளர்மணி டாக்டர் பெருமாள் தலைமையில் வீரவிதை வில்வித்தை அகாடமி கலந்துகொண்டு 8 வயதுக்குட்பட்ட பிரிவில் கலை எழிலன் முதல் இடத்தையும், ஜெயமித்ரன் இரண்டாம் இடத்தையும், சுஷாந்த் மூன்றாம் இடத்தையும் 10 வயதுக்குட்பட்ட பிரிவில் பிரனிஷ், அதிரஞ்சன் இரண்டாம் இடத்தையும், பெண்கள் பிரிவில் தேசிகா ஸ்ரீ இரண்டாம் இடத்தையும், 12 வயதுக்குப்பட்ட பிரிவில் கிருத்திக் பில்லு மூன்றாம் இடத்தையும், 14 வயதுக்குட்பட்ட பிரிவில் நித்தின் மெஸ்ஸி, அருள்குமரன், ராஜ்குமார் முதல் இடத்தையும் பெற்று அகாடமிக்கு பெருமை சேர்த்துள்ளார்கள். வெற்றி பெற்றவர்களுக்கு பெற்றோர்கள் வாழ்த்துக்களை தெரிவித்தார்கள்..



■ மதுரை மேற்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட தாரப்பட்டி கிராமத்தில் புதிய தார் சாலை அமைக்கும் பணிக்கான பூமி பூஜையில் மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு.பி மூர்த்தி கலந்து கொண்டு பணிகளை தொடங்கி வைத்தார்.



■ சிவகங்கை மாவட்ட பெருந்திட்ட வளாகத்தில் அமைந்துள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அறையில், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி அறிவுரையின்படி, மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ்.செல்வசுரபி, அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அரசியல் கட்சி பிரமுகர்கள் முன்னிலையில், நேரில் பார்வையிட்டு காலாண்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் தேர்தல் வட்டாட்சியர் அ.மேசியாதாஸ் உட்பட பலர் உள்ளனர்.



## தேவகோட்டை நகரில் விதிமுறைகளை மீறி பொதுக்கூட்டம்

சிவகங்கை, ஜூலை.01-

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை நகரை சுற்றி சுமார் 200க்கும் மேற்பட்ட கிராம மக்கள் தங்களின் மருத்துவ சிகிச்சைக்கு வந்து செல்கின்றனர். நகரின் சிலம்பணி விநாயகர் சன்னதி தெருவில் மகப்பேறு, குழந்தைகள் நலம், பொது மருத்துவமனைகள் என சுமார் 10க்கும் மேற்பட்ட மருத்துவமனைகள் உள்ளது. சிலம்பணி விநாயகர் கோவில் முன்பு அரசியல் கட்சிகள் மேடைகள் அமைத்து பொதுக்கூட்டங்கள் நடத்தும்போது தடை செய்யப்பட்ட கூம்பு வடிவிலான ஒலிபெருக்கிகளை அதிக எண்ணிக்கையில் வைத்து நடத்துகின்றனர் கூம்பு வடிவ ஒளி வறிகளால் அதிக சத்தம் ஏற்பட்டு நோயாளிகள் பாதிப்படைகின்றனர். மேலும் விநாயகர் கோவில் நுழைவு வாயிலில் மேடை அமைத்ததால் கோவிலுக்கு செல்லும் பொதுமக்கள் மிகவும் சிரமப்பட்டனர் மேலும் மருத்துவமனைகளுக்கு வரும் நபர்கள் அவதிப்பட்டனர்..





■ தமிழக வெற்றி கழக தலைவர் தளபதி விஜய் அவர்களின் 51 வது பிறந்த நாளை முன்னிட்டு சிவகங்கை கிழக்கு மாவட்ட மருத்துவர் அணி சார்பாக மாபெரும் கண் தான முகாம் மற்றும் இலவச மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. இம்முகாமில் 15 க்கு மேற்பட்ட மருத்துவத்துறை மருத்துவர்கள் மற்றும் வாசன் ஐ கேர் பங்குபெற்று முகாமினை சிறப்பித்தனர். முகாமினை தமிழக வெற்றி கழக சிவகங்கை கிழக்கு மாவட்ட செயலாளர் மருத்துவ டி.கே பிரபு கலந்துகொண்டு குத்துவிளக்கு ஏற்றி துவக்கி வைத்தார். முகாமில் நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு தங்கள் கண்களை தானம் செய்தது முகாமின் சிறப்பம்சமாகும். முகாமில் யிரத்துக்கு மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர். காரைக்குடியில் இது போன்ற முழுமையாக பயனுள்ள முகாமாக நடைபெற்றது இதுவே முதல்முறை என பொதுமக்கள் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர். இம் முகாமிற்கான ஏற்பாட்டினை சிவகங்கை கிழக்கு மாவட்ட மருத்துவர் அணி சார்பில் வெகு சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

## வேலூரில், (அ.இ.பெ. ஆப். மா.பி) அச்சக உரிமையாளர்கள் சங்கம் சார்பில் ரொமான்சிங் 2025 பிரண்ட்ஸ் சிறப்பு பயிற்சி விழா




வேலூர், ஜூலை.01-

வேலூர் மாவட்டம், வேலூர் கிரீன் சர்கிள், சாந்தி மஹாலில் அச்சக உரிமையாளர்கள் சங்கம் மற்றும் ஆல் இந்தியா பெடரேஷன் ஆப் மாஸ்டர்ஸ் பிரிண்டிங் இணைந்து நடத்திய ரொமான்ஸிங் பிரண்ட்ஸ் 2025, வேலூர் சாந்தி மஹாலில் பிரிண்டிங் பற்றிய மகத்துவம் குறித்து விளக்கவுரை மற்றும் ஊக்கப்படுத்தும் விதமாக பயிற்சி விழா, மாவட்டத் தலைவர் ரவி தலைமையிலும், மாவட்டச் செயலாளர் வெற்றிவேல் வரவேற்புரையாற்றுக்கையில், பொருளாளர் தேவராஜ் முன்னிலையிலும் நடைபெற்றது. இவ்விழால் வேலூர் மாவட்ட பிரிண்டர்ஸ் அசோசியேஷன் அமைப்பின் பவுண்டர்ஸ் சத்யசீலன் ராஜு ஆனந்த் ஆகியோருடன், சிறப்பு அழைப்பாளராக வேலூர் வி.ஐ.டி. பல்கலைக்கழக துணைத் தலைவர் ஜி.வி.செல்வம் பங்கேற்று குத்துவிளக்கேற்றி ரொமான்சிங் 2025 பிரிண்டிங்ஸ் சிறப்பு விழாவை தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார். இதனைத் தொடர்ந்து சிறப்பு அழைப்பாளர்களுக்கும், சிறப்பு விருந்தினர்களுக்கும் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டது. சிறப்பு விருந்தினர்களாக, AIFMP- புது தில்லி, பொதுச் செயலாளர் கே.ராஜேந்திரன், துணைத் தலைவர் எம்.பாலகோபால், சி.ஆர்.ஜனதனா, பி.சந்தர், வேலூர் பத்மாஸ்ரீ கிராபிக்ஸ் சி.குமரவேல், கௌரவத் தலைவரும், பாலாஜி லித்தோ நிறுவனமான வி.ஆர்.ராஜேஷ் கண்ணா, கௌரவத் தலைவர் கிருஷ்ண கோபால் ஆகியோர் கலந்துகொண்டு விழாவை சிறப்பித்தனர். இதில் மாநில, மாவட்ட நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் உறுப்பினர்கள் என 500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். இதனைத் தொடர்ந்து மரக்கன்றுகள் வழங்கப்பட்டது. இறுதியில் பொருளாளர் தேவராஜ் நன்றியுரையாற்றி விழா நிறைவுபெற்றது.

### 5வது மண்டலத்திற்குட்பட்ட மேற்கு தாம்பரத்தில் 76லட்சம் மதிப்பீட்டில்

## புதிய பேருந்து நிலையம், போக்குவரத்து சிக்னல், அறிவியல் பூங்கா ஆகியவற்றை திறந்து வைத்த எம்எல்ஏ எஸ்.ஆர்.ராஜா, மேயர் வசந்தகுமாரி



தாம்பரம், ஜூலை.01-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சிக் குட்பட்ட 5வது மண்டலத்தில் தாம்பரம் மேற்கு பகுதி 46வது வட்டத்தில் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 10லட்சம் மதிப்பீட்டில் புதிய பேருந்து நிகழ்கடை, 64வது வட்டத்தில் தாம்பரம் மாநகராட்சி பொது நிதியிலிருந்து 6லட்சம் மதிப்பீட்டில் புதிய போக்குவரத்து சிக்னல், 48வது வட்டத்தில் தாம்பரம் மாநகராட்சி பொது நிதியில் இருந்து 60இலட்சம் மதிப்பீட்டில் திறன் வளர்க்கும் அறிவியல் பூங்காவை தாம்பரம் மாநகர செயலாளர், தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். ராஜா தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி ஆகியோர் கலந்து கொண்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார் இந்த நிகழ்ச்சியில் தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ.காமராஜ், மண்டல குழு தலைவர்கள் எஸ்.இந்திரன், டி.காமராஜ், தலைமை கழக பேச்சாளர் கி.வேல்மணி, மாமன்ற உறுப்பினர்கள் ரமணி ஆதிமூலம், ஷகிலா ஜான்சி மேரி, ஆர்.சசிகலா கார்த்திக், வட்ட செயலாளர்கள் வீ.முனுசாமி, சீ.இளஞ்செழியன், கே.ரமேஷ் பாபு பகுதி கழக நிர்வாகிகள், மாவட்ட மாநகர பிரதிநிதிகள், வட்ட செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட மாநகர பகுதி அணிகளின் நிர்வாகிகள், வட்ட கழக நிர்வாகிகள் மற்றும் பொது மக்கள் அனைவரும் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161